உ

திருச்சிற்றம்பலம்

ஒளிமயம், சுடர் மயம், ஜோதி மயம் துணை



# பூலோக கயிலாயம் என்னும்
# ஸ்ரீ தில்லைச் சிதம்பர வரலாறு



வெளியீடு : வள்ளலார் இளைஞர் மன்றம், வடலூர்.

உ

விநாயகர் துணை

1) தில்லை என்றால் என்ன?
தில்லை என்பது ஒருவகை எண்ணெய் தரும் மரம்.

2) அது எங்கே உள்ளது?
சிதம்பர தலத்தில் உள்ளது.

3) அப்போது அது ஸ்தல விருட்சமா?
ஆமாம்.

4) தில்லை சிதம்பரம் என்றழைப்பதற்கு ஆதாரம் என்ன?
திருவிளங்க என்பது வள்ளலார் பாடல் அதில் வரும் தொடர் - திருத்தில்லை திருச்சிற்றம்பலம் என்பதே.

5) இப்போது அந்த மரம் உள்ளதா?
உள்ளது

6) அந்த மரத்திற்கு என்ன சிறப்பு?
ஆகாய வடிவமான சிதம்பர மூலட்டானர் ஆதியில் அம்மரத்தடியில் கோயில் கொண்டிருந்தார்.

7) மூலட்டனார் என்பவர் யார்?
அவர் சிதம்பர மூலவர்.

8) அப்போது உற்சவர் யார்?
அவர் நடராஜர் சிவகாம வல்லி.

9) யாருக்கு அங்கு மகிமை?
உற்சவருக்குத்தான்.

10) ஏன் அப்படி?
நடராஜர் ஸ்தபதிகளால் அமைக்கப்பட்டவர் அல்லர். திருஅருளால் சித்உருவாய் அமைந்தவர்.

11) சிவகாமி யார்?
அந்தச் சபாநாயகரின் பிராட்டியார்.

12) மூலட்டான தேவியாருக்குள்ள அருள் பெயர்கள்?
சிவை, உமை, பரை என்பன.

13) மூலட்டானர் வல்லபம்?
பர சிவானந்த வல்லபம்.

14) அவரது அனுக்கிரக நிலை?
திருவோங்க -சிவயோக சித்தியெலாம் விளங்கச் சிவானுபவம் விளங்குவிப்பது.

15) சிவகாமியின் வல்லபம்?
உருவிளங்க, உயிர் விளங்க, உணர்ச்சியது விளங்க, உலகம் எலாம் விளங்க, அருள் உதவுவது அந்தப் பெருந்தாயின் வல்லபம்.

16) நடராஜர் என்பதன் விளக்கம்?

இயற்கை உண்மைப் பெரும் பதியின் திருவடி நிலை.

17) அப்படி என்றால்?

அருள் ஒளி விளங்கும் திருவிளக்கு நிலை.

18) சிவகாமி என்பதன் விளக்கம்?

அருள் சிறக்கும் அனுக்கிரக சத்தி நிலையாகும்.

19) சிதம்பரத்திற்குள்ள ஆதி பெயர்

திருக்கோயில்.

20) திருக்கோயில் என்பது?

இயற்கை விளக்கம் என்னும் சுத்த சிவ வெளி நிலை எனப்படும்.

21) சிதம்பரத்திற்கும் பல பெயர்கள் உள்ளனவா?

ஆமாம்.

22) அவையாவை?

திருப்புலியூர் - புண்டரிகபுரம் - தகராகாசம் முதலியன.

23) தீர்த்தம்?

சிவகங்கை தீர்த்தம்.

24) அதன் சிறப்பு?

வள்ளலார் ஒரு முறை அங்கு வழுக்கி விழுந்தார். உடனே ஓடி வந்து நடராஜர் தூக்கியருளினார்.

25) அப்படியா?
அப்படித்தான்.

26)

27) அப்புறம்?
இரணியவர்மன் என்னும் அரசன் உடல் நோய் நீங்கிப் பொன் உடல் பெற்றான். அதனால் தில்லைச் சிதம்பர அடியவன் ஆனான்.

28) சிதம்பரத்தில் முத்தி அடைந்தவர்கள் இருக்கிறார்களா?
பலர் இருக்கின்றனர்.

29) முக்கியமானவர் யார்?
முத்துத்தாண்டவர்.

30) அவர் யார்?
அவர் சீர்காழியைச் சார்ந்த சிறந்த அடியவர்.

31) தகுதிப்பாடு?
ஒரு ஆவணி மாதப் பூச நன்னாளில் தில்லை அம்பலத்தானுடன் ஜோதியில் கலந்து கொண்ட இசை வேளாளர் அவர்.

32) செய்த சேவை?
ஆடல்-பாடல் ஆன்ம நேயப் பணிகள்.

33) அவரது கருத்து?

மாணிக்கவாசகர் அடைந்த பேறே பெரும் பேறு என்பது.

34) அப்படி வள்ளலார் இல்லையா?

அதனினும் சிறந்து நின்றார்.

35) முத்துத் தாண்டவர் என்ன வரம் கேட்டார்?

மாணிக்க வாசகர் முத்தியைத் தனக்கும் தரும்படிக் கேட்டார்?

36) ஏன்?

அலைவுபடாமல் - மண்ணில் புதைக்கப்படாமல் - நெருப்பில் எரிக்கப்படாமல் - சிதம்பர ஆகாய தலத்தில் கலந்து கொள்ள வரம் கேட்டார்.

37) சீர்காழி முத்துத் தாண்டவர் இங்கு எப்படி வந்தார்?

சீர்காழி அம்மை திருநிலை நாயகி அனுப்பி வைத்தாள்.

38) ஏன்?

உடல் நோய் தீர.

39) தீர்ந்ததா?

உடற்பிணி, உயிர்ப்பிணி,வறுமைப்பிணி யாவும் தீர்ந்தது.

40) அவருக்குச் சிதம்பரத்தில் விசேஷம் இல்லையா?

உண்டு.

41) உதாரணம்?

இப்போதுள்ள தீட்சிதர்களின் காரியதரிசியாரே அவர் பெயர் கொண்டவர் தான்.

42) அவர் பாட்டு எப்படி இருக்கும்?
கீர்த்தனைகள். அவையாவும் அமுதமாய் இருக்கும்.
43) அப் பாட்டில் ஒரு வரி கூறும்?
அருமருந்து ஒரு திருமருந்து அம்பலத்தே கண்டேன்.
44) நந்தனார் என்பவர் யார்?
அவர் ஆதிச் சிவனடியார்.
45) அவர் பெற்ற சிறப்பு என்ன?
சிதம்பரநாதர் அவரைத்தான் தன் ஜோதியில் முதன் முதலில் கலந்து கொள்ளச் செய்தார்.
46) அவர் பாடல்கள் பாடியுள்ளாரா?
அவர் பெயரால் - கோபாலகிருஷ்ண பாரதியார் பாடியுள்ளார்.
47) ஒரு பாடல்?
தில்லை வெளியிலே கலந்து கொண்டார். அவர்
திரும்பியும் வாராரோ? வாராரோ?
48) அப்படி என்றால் அர்த்தம் என்ன?
பக்திப் பரவசத்தில் திளைத்தால் தில்லைக் கூத்தனுடன் கலந்தவர் என்று அர்த்தம்.
49) மாணிக்கவாசகர் அப்படிக் கலந்தாரா?

ஆமாம்.

50) எப்போது?
ஒரு ஆனி மாதம் மக நட்சத்திரத்தில்.

51) சிதம்பர விழாக்கள் என்னென்ன?
மூல விழா - தைப்பூச விழா.

52) அடுத்த விழா?
மார்கழித் தரிசன விழா.

53) அடுத்தபடி உள்ள விழா?
ஆனித் திருமஞ்சன விழா.

54) அது எப்போது?
ஆனி உத்தர நட்சத்திரத்தில்.

55) என்ன நடக்கும்?
மகோற்சவம் நடக்கும்.

56) எத்தனை நாளைக்கு?
10 நாளைக்கு.

57) சிறந்த விழா?
தேர்த் திருவிழா.

58) அப்புறம்?
அபிஷேகத் திருவிழா.

59) பின்பு?
மகா தரிசனத் திருவிழா.
60) அது போகப் பாக்கித் திருவிழாக்கள் எத்தனை?
நான்கு.
61) அது எப்போது நடக்கும்?
சித்திரை ஓணத்தில் மாலையில் அபிஷேகம் நடக்கும்.
62) பிறகு?
ஆவணி, புரட்டாசி,மாசி மாதங்களில் சதுர்த்தி திதியில் மாலையில் அபிஷேகம் நடக்கும்.
63) அபிஷேகம் எதற்கு?
நடராஜர் அபிஷேகப் பிரியர், ஆடல் பிரியர் என்பதனால்.
64) அவருக்கு அபிஷேகம் செய்வதால் நமக்கு என்ன நன்மை?
அதிகாலை 4 மணியிலிருந்து 6 மணி வரை - மாலை 6 மணியிலிருந்து 8 மணி வரை மனது சுத்தமாக, தூய்மையாக, புனிதமாக, பக்தி பரவசத்துடன் இருக்கும்.
65) அப்படி இருந்தால்?
தியானம், யோகம் செய்யும் வல்லபம் கை கூடும்.
66) அப்படிக் கைகூடினால்?
சிவஞானச் சிறப்பு உண்டாகும்.

67) அதனால் நன்மை?
ஆண்டவனின் மெய்டியார் ஆகித் திருவடியில் கலந்து விடுவோம்.
68) அதற்குச் சான்று?
திருமூலர்.
69) மெய் அன்பர் என்பது யார்?
மாணிக்கவாசகர்.
70) மெய் அடியார் என்பது யார்?
திருநீலகண்டர்.
71) இதற்கு மேல்?
அருளாளர்.
72) அவருக்கென்ன தகுதி?
மனித நேயத் தகுதி. மற்றும் ஆன்ம நேயத் தகுதி.
73) மனித நேயத் தகுதி என்பது?
எல்லாரும் இன்புற்றிருக்க எண்ணிச் செயல்படுவது.
74) அப்படி எண்ணியவர்?
இராமலிங்க வள்ளலார்.
75) உதாரணம்?
உமக்குத் தெரியுமே. வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்

என்பது தான்

76) அதனால் வள்ளலார் என்ன ஆனார்?

ஜோதியானார்.

77) எங்கே?

வடலூருக்கு அருகே மேட்டுக்குப்பத்தில்.

78) வடலூரில்?

அருட்பெருஞ்ஜோதித் திருச்சபை கண்டார்.

79) அங்கு என்ன விசேஷம்?

அது ஞான ஒளி வழிபாடு செய்யும் அருள் நடன இடமாகும்.

80) இது

உருவ வழிபாடு செய்யும் ஆனந்த நடன இடமாகும்

81) ஒளி வழிபாட்டின் சிறப்பு?

அது அனைவருக்கும் ஏற்புடையது என்பதே.

82) வள்ளலார் சிதம்பரத்திற்கு வந்தாரா?

பல தடவைகள் வந்துள்ளார்.

83) வந்து?

அம்பலவாணரை அம்பலவாணியை 4வது திருமுறையில் வாயார வாழ்த்தி வழிபட்டுப் பாடினார்.

84) அதற்கு அம்பலவாணர்?

மகிழ்ந்து - திருநீறு தந்தார் - அருட் பிரசாதம் தந்தார். செல்வ மகனாக வள்ளலாரை ஆக்கிக் கொண்டார்.

85) மேலும்?

நரை, திரை, மூப்பு, பிணி, சாக்காடு, பசி, உறக்கம், சலம், மலம் ஆகியவை இல்லாத சுத்த உடம்பையும் ஈந்தருளினார்.

86) அதனால் பலன்?

எதனாலும் தடைபடாமல் உயிர்களுக்கு உபகாரம் செய்துவருவது.

87) அப்படி என்ன உபகரித்தார் வள்ளலார்?

உடல் நோய் தீர்த்தார், பசி நோய் தீர்த்தார், வறுமை நோய் தீர்த்தார், அறியாமை போக்கினார், பாதகப் பலி தவிர்த்தார் - மாமிசம் உண்ணும் விருப்பத்தை மாற்றினார் - நாத்திகரை ஆத்திகர் ஆக்கினார். போதுமா?

88) இவை எல்லாம் எங்கே கற்றார்?

எல்லாம் நமது தில்லை சிதம்பர பீடத்தில் தான்.

89) சிதம்பர மகிமைக்கு ஒரு எடுத்துக்காட்டு?

ஒரு முறை ஒடாத தேரை ஓட்டிக் காட்டினார் சேந்தனார்.

90) மறுபடி?

ஏறாது நின்று போன இடபக் கொடியை ஏற்றித் திருவிழா நடத்திக் காட்டினார் உமாபதி சிவம்.

91) அவர் யார்?
அவர் சமரச உள்ளம் வாய்ந்த தீட்சிதர்.
92) எப்படிச் சமரச உள்ளம் வாய்ந்தவர் என்கிறீர்?
பெற்றான் சாம்பான் என்னும் அரிசனருக்கு நன் முத்தியைக் கொடுத்ததினால்
93) அங்கு எத்தனை வேளை பூசை?
6 வேளை.
94) தரிசிக்க வேண்டிய பூஜைக் காலங்கள்?
எனக்குப் பிடித்தது வரை காலை பூசை, மாலை பூசை, அர்த்த சாமப் பூசை.
95) எத்தனை கோபுரங்கள் உடையது தில்லை?
அஜானுபாகுவான நான்கு கோபுரங்கள்
96) அப்புறம் சபைகள் உண்டாமே! அது எத்தனை?
ஐந்து
97) அது என்னென்ன?
இராஜசபை - ஆனி, மார்கழி அபிஷேகம் நடக்கும் இடம்
தேவ சபை - தீட்திசிதர்கள் சபை கூடும் இடம்
நடன சபை - ஊர்த்தவ நடனம் செய்த இடம்

பொற்சபை - ஆராதனை, அபிஷேகங்கள், பூசைகள் நடக்கும் இடம்

சிற்சபை - தில்லைக்கூத்தர் ஆனந்த நடமிடும் இடம்.

98) இரகசியம் என்றால் என்ன?

சிதம்பரச் சக்கரம் அமைந்த இடம்.

99) சிதம்பரச் சக்கரம் என்றால்?

தில்லைச் சிதம்பர உண்மையை விளக்கும் மந்திர பீடம்.

100) இன்னும் என்னென்ன அங்கு உள்ளன?

நடராஜரின் நவரத்தினத் திருவடிகள்.

101) ஸ்படிக லிங்கமா உள்ளது?

ஆமாம். அது நடராஜர் திருவடியில் உள்ளது.

102) போதும் அப்புறம் என்ன உள்ளது?

இரத்தின சபாபதி. அதுவும் சிதம்பரத்தில் நடராஜர் திருவடியில் உள்ளது.

103) நடராஜர் திருவடி எப்படிப்பட்டது?

ஒளிமயமாகவும் வெளிமயாகவும் நின்று நமக்கு அருள் தருவது.

104) அதன் சிலம்பு ஒசை கேட்டதாமே!

ஆமாம் மலை நாட்டு மன்னருக்கு கேட்டது,

105) ஏன்?

சுந்தரமூர்த்தி சாமியின் பாடலுக்கு நடராஜர் சொக்கிப் போனதால்.

106) சொக்கிப் போவது என்றால் என்ன?

சொல்லக்கூடாது.

107) பின்னும் அங்குள்ள சிறப்பு

தெய்வப் புலவர் சேக்கிழார் பெரிய புராணம் பாட நடராஜர் முதல் வரி எடுத்துத் தந்தது.

108) அது என்ன?

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன் என்பது.

109) மணிவாசகர் எங்கிருந்தார்?

பிச்சாவரக் காட்டில் பர்ணசாலையில்.

110) என்ன செய்தார்?

அழுதுபாடி நடம் செய்தார்.

111) அது எப்படி உமக்குத் தெரியும்?

அதைக் கேட்டுத் தானே அப்படியே ஓலைச் சுவடியில் எழுதிக் கொண்டார் சிதம்பர சிற்றம்பல முடையார்.

112) அப்புறம்?
மாணிக்கவாசகர் அப்போது பாடிய திருவெம்பாவையைக் கேட்டுச் சிருங்கார நூல் ஒன்று எழுதித் தரச் சொன்னார்.
113) அது என்ன நூல்?
திருக்கோவையார்.
114) அதன் சிறப்பு என்ன?
அது 400 பாடல்களைக் கொண்ட ஒரு அகப்பொருள் நூல்.
115) அப்படி என்றால்?
தலைவன், தலைவி இன்ப சம்பந்தா சம்பந்தத்தை எடுத்துரைப்பது.
116) அந்த நூலுக்குத் தலைவர் யார்?
மாணிக்கவாசகர்.
117) மணிவாசகன் பாடிய திருக்கோவையாருக்குத் தலைவி யார்?
நடராஜர்.
118) இப்படியுமா பாடுவது?
இதற்கு மேலும் பாட முடியும், பாடச் செய்து தலைவி ஆனவர் நடராஜர்.
119) அது என்ன தலைவி என்பது?
அது ஆண்டவரே அடியாருக்குக் காதலியாகிக் களிப்பூட்டுவதைப் பாடுவது